<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>இடைநிலை மனுஎண்.4/2024</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.716/2019</u>

1. ராமலிங்கம்
2. செல்வி ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

மீனாட்சி (இறந்தார்)
1. தனம்
2. துணை பதிவாளர், வாலிகண்டபுரம்
3. மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்
4. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலம், வேப்பந்தட்டை
5. கிராம நிர்வாக அலுவலர், பசும்பலூர் (தெற்கு) ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 07.12.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றதரப்பினர் நிலைக்கு வைக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர் நிலைக்கு வைக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9–ன் கீழ், கடந்த 08.01.2024–ம் தேதி அன்று மனுதாரர்களின் தவறுகைக்காக தள்ளுபடியான அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து வழக்கை மேல்நடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

மேற்படி வழக்கில் மனுதாரர் 2வது வாதி என்றும், இம்மனுவை தனக்காகவும் 1ம் மனுதாரர் சார்பாகவும், தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு பாகபிரிவினை மற்றும்

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.01.24 15:53:50 +0530

அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கு 08.01.2024 அன்று APC ஐ தாக்கல் செய்வதற்கும், திருத்தத்தை நிறைவேற்றுவதற்கும் வாய்தா அளிக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி தேதியில் தனது உறவினர் சுப்ரமணி என்ற மாமா கிராமத்தில் இறந்துவிட்டார் என்றும், தானும், தனது தந்தையான 1ம் மனுதாரர் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்றுவிட்டதாகவும், அதை தங்களால் வழக்கறிஞரிடம் தெரிவிக்க முடியவில்லை என்றும், எனவே தங்கள் தவறுகைக்காக மாண்புமிகு நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது என்றும், தற்போது வழக்கறிஞரை சந்தித்த போது தான் மேற்படி விவரம் தெரியவந்தது என்றும், மேலும் APC–யை இம்மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே கடந்த 08.01.2024–ம் தேதி அன்று மனுதாரர்களின் தவறுகைக்காக தள்ளுபடியான அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து வழக்கை மேல்நடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 2 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தால் அழைத்தும் ஆஜரின்மையால் 08.11.2024ம் தேதி தோன்றதரப்பினர் நிலைக்கு வைக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்யாததால் 07.12.2024ம் தேதி ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

<u>தீர்வு</u>

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கு கட்டினை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து பொருத்து பாகபிரிவினை மற்றும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு 18.04.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் கூடுதல் வழக்குரையை தாக்கல் செய்யாத காரணத்தினால் 08.01.2024ம் தேதி தள்ளுபடி

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.01.24 15:53:56 +0530

செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இம்மனுவில் கூறியுள்ள காரணமான தனது உறவினர் சுப்ரமணி என்ற மாமா கிராமத்தில் இறந்துவிட்டதால் மனுதாரரர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்றுவிட்டதாக கூறியுள்ள காரணம் முழுவதும் ஏற்கதக்கதல்ல என்றபோதும், இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததாலும், மனுதாரர் வாதியாக உள்ள நிலையிலும் அவரது வழக்கை நிரூபிக்க அவருக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலன் பொருட்டு உகந்தது என்று கருதியும், மனுவானது 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.01.24 15:54:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2025.01.24 15:54:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.